SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Advanced Level
Higher 2

# தமிழ்மொழி, இலக்கியம் 9577/2

தாள் 2

**TAMIL LANGUAGE AND LITERATURE** **SPECIMEN PAPER**

Paper 2 *With effect from 2022 examination*

**1 hour 45 minutes**

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 இவ்வினாத்தாளில் இரண்டு பிரிவுகள் உள்ளன.

2 ‘அ’ பிரிவில் ஒரு பனுவலும் அதனையொட்டி ஐந்து வினாக்களும் இடம்பெற்றுள்ளன. ‘ஆ’ பிரிவில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் இடம்பெற்றுள்ளன. இவ்விரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து இவற்றையொட்டி அமைந்த வினாக்கள் அனைத்துக்கும் சொந்த நடையில் விடையெழுதவேண்டும்.

3 தேர்வாளர் கூறியதும் **‘START’** என்பதைக் ‘கிளிக்’ செய்து தேர்வெழுதத் தொடங்கவும்.

Note:
This paper is conducted in e-examination format. Please access the SEAB website (seab.gov.sg/home/examinatons/examinations/e-exam-resource) online tutorial for more Information.



Singapore Examinations and Assessment Board

©MOE

## ‘அ’ பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல் 1** **(32 மதிப்பெண்கள்)**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனையொட்டி அமைந்த வினாக்களுக்கு சொந்த நடையில் விடை எழுதுக.

வாழ்க்கையில் மனித உறவுகள் தவிர்க்க இயலாதவை. பெற்றோர், பிள்ளை, உடன்பிறப்பு என நம் வாழ்க்கையில் நம்மோடு கலந்துறவாடும் உறவுகள் பற்பலவாகும். இவை யாவும் நம்மைத் தேடி வருபவை. இவற்றை நாம் தீர்மானிப்பதில்லை. ஆனால், நாமே நாடிச்செல்லும் உறவு ஒன்று உண்டு. அதுவே நட்பாகும். தூய நட்பு உணர்வோடு கலந்தது; காலத்தால் வளர்வது. அதனாலன்றோ இலக்கியங்கள் நட்புறவை வானளவு சிறப்பித்துப் பாடியுள்ளன.

நாலடியார் என்னும் நூலில் மூன்று அதிகாரங்கள் நட்பைப்பற்றி அமைந்துள்ளன. அரிய நூல்களின் உட்பொருளைக் கற்றுணர்பவரோடு கொள்ளும் நட்பு எப்போதும் கரும்பை நுனியிலிருந்து தின்பதற்கு ஒப்பாகும். கரும்பின் நுனியைவிட அதன் அடிதான் சுவையாக இருக்கும் என்பது யாவரும் அறிந்ததே. கரும்பை நுனியிலிருந்து தின்றால் இனிமை அதிகமாவது போலக் கற்றோர் நட்பின் ஆழம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகும். மாறாக, எக்காலத்துக்கும் தீயோரிடம் கொள்ளும் நட்பானது கரும்பை அடியிலிருந்து நுனி நோக்கித் தின்பதற்கு ஒப்பாகும். கரும்பை அடியிலிருந்து தின்பது தொடக்கத்தில் சுவையாக இருந்தாலும் போகப் போக இனிமை **குன்றுவது** போலக் கல்லாதார் நட்பினது தன்மை மாறும் என்று நாலடியார் விளக்குகின்றது.

அற இலக்கியங்கள் கூறும் நட்புக்கு முன்னோடியாக அமைந்தவை சங்க இலக்கியங்களே. அக்காலத்தில் மன்னர்களுக்கும் புலவர்களுக்கும் **ஆழமான** நட்புறவு நிலவியது. அதியமான்-ஔவையார், பாரி-கபிலர் ஆகியோரிடையே இருந்த நட்பு என்றென்றும் பெருமையாகப் போற்றப்படுவது. அதியமானுடன் மிக ஆழந்த நட்புக் கொண்டிருந்த ஔவையார் நட்புரிமையோடு தலையிட்டு நடக்கவிருந்த ஒரு பெரும்போரைத் தடுத்து மண்ணையும் மக்களையும் பெரும் அழிவிலிருந்து காப்பாற்றினார். போர் ஏற்படும் முன்னரே நட்புக்கரம் நீட்டி மன்னரின் பகையுணர்வைப் புறந்தள்ளச் செய்தவர் ஔவையார். நீண்ட நாள் உயிர் காக்க வல்ல நெல்லிக்கனியைத் தாம் உண்ணாது ஔவையாருக்குத் தந்து நட்பின் மாண்பைக் காத்த பெருமை அதியமானுக்குரியது. பாரி கபிலரிடையே நிலவிய நட்பின் மாண்பை இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளன. சூழ்ச்சியால் பாரி வேந்தனை மூவேந்தர் கொன்றபோது அந்த அவலத்தைப் பொறுத்துக்கொள்ள இயலாத கபிலர் தம்முயிரையும் துறக்க முற்பட்டார். ஆனால், பாரியின் பிள்ளைகளைக் கரைசேர்க்கும் கடமையினை நிறைவேற்றும்வரை காத்திருந்து பின்னர்த் தம்முயிரைத் துறந்த கபிலரது நட்பின் மாண்பு போற்றுதற்குரியதாகும்.

மனித வாழ்வில் நட்பு ஏற்படுத்தும் தாக்கம் மிகவும் ஆழமானது. பலரது வாழ்வில் பெரும் திருப்பங்களுக்குக் காரணமாகவும் அது அமைந்துவிடுகிறது. அத்தகைய நட்பானது பண்பற்ற உள்ளங்களை நெறிப்படுத்தி அவர்களைச் சீரிய பண்பாளர்களாக உருவாக்கத் துணைபுரியும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நெறிப்படுத்தி வழிநடத்த இயலாத

சூழ்நிலை உருவாகும் வேளைகளில் அவர்கள் தங்கள் பிள்ளைகளின் நண்பர்களை அணுகி உதவி நாடுவதை நாம் கண்கூடாகக் காணலாம்.

நட்பு ஒருவரது சிந்தனைப் பாங்கு, நடத்தை, நடை, உடை, பாவனை முதலான அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. அத்தாக்கம் நல்ல மாற்றங்களுக்கு வழிகோலவேண்டுமே தவிர எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடாது. நல்ல நட்பு ஒருவரை நெறிப்படுத்தும் தன்மை கொண்டது என்று விளக்குவர் சான்றோர். அவசரத்தில் ஒருவரை நம்பிவிடுவதும் பின்னர் நம்பிக்கைக்கு உரியவர் எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவரைச் சந்தேகிப்பதும் தீராத துயரைத் தரும் என்கிறார் வள்ளுவர். நல்ல நட்புறவை **வேண்டுவோர்** இத்துயரைத் தவிர்க்கவேண்டும். அன்பையும் புரிந்துணர்வையும் அடிப்படையாகக்கொண்டு எழும் நட்பு எல்லை கடந்தது. அதனை எந்தச் சக்தியாலும் தகர்த்துவிட இயலாது.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

**வினாக்கள்**

1 உறவுகளுள் நட்பு எப்படி வேறுபடுகிறது? அது சிறப்பிடம் பெறக் காரணம் என்ன? (4 மதிப்பெண்கள்)

2 கட்டுரையாசிரியர் நட்பின் தன்மையை ஏன் கரும்பு தின்பதோடு ஒப்பிடுகிறார்? (7 மதிப்பெண்கள்)

3 சங்க கால மன்னர்களுக்கும் புலவர்களுக்கும் இடையே நிலவிய நட்பினால் எத்தகைய நன்மைகள் விளைந்தன? (6 மதிப்பெண்கள்)

4 நல்ல நட்புக்குரிய இயல்புகள் யாவை? (7 மதிப்பெண்கள்)

5 **சொற்பொருள்** (8 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றும் பகுதியில் உணர்த்தும் பொருளை எழுதுக.

**(i)** குன்றுவது

**(ii)** ஆழமான

**(iii)** நெறிப்படுத்தி

**(iv)** வேண்டுவோர்

## ‘ஆ’ பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல் 2** **(33 மதிப்பெண்கள்)**

**பனுவல் ஒன்று**

| **எண்ணங்கள் வண்ணங்கள் - சகுந்தலை** | *கடந்த இதழ்கள்* |
|---|---|

### கல்வியின் வளர்ச்சிப் பாதையில்...

கல்வியின்மூலம் சமுதாயத்தைச் சிறப்பான முறையில் வழிநடத்த இயலும். மனிதனுக்கு நல்லொழுக்கத்தைப் போதித்து அவனைப் பண்படுத்தும் கருவியாகக் கல்வி திகழ்கிறது. கல்வியாளர்களின் கூற்றின்படி இன்றைய தலைமுறையினரைச் சரியாக வழிநடத்துவதிலும் சமுதாயத்திற்குப் பங்காற்ற அவர்களை உருவாக்குவதிலும் கல்விக்கு முக்கியப் பங்குண்டு. கல்வியால் ஏற்படும் வளர்ச்சி மக்களை ஏழ்மையிலிருந்து மீட்டெடுக்கின்றது. சமுதாயத்தில் கல்வி கற்றவருக்கே மதிப்பும் மரியாதையும் உண்டல்லவா?

இன்றைய கல்வி வளர்ச்சியானது பலதுறை சார்ந்த வேலை வாய்ப்புகளை வழங்குகிறது. ஊடகம், கணக்கியல், தொழில்நுட்பம் எனப் பல துறைகளாகக் கல்வி விரிவடைந்துள்ளது. அன்றைய கல்விமுறையில் மருத்துவம், பொறியியல் முதலான தேர்ந்தெடுக்கப்பட்ட சில துறைகளே முக்கியத்துவம் பெற்றிருந்தன. இது நாளடைவில் வேலைச் சந்தையில் பெரும் புரட்சியையும் போட்டித்தன்மையையும் ஏற்படுத்தியது. அதன் விளைவாகப் புதுப்புது துறைகளின் தேவையும் பெருகிற்று; கல்வியில் பெரும் மாற்றங்களும் நடந்தேறின.

கடந்த காலத்தில் கல்வியானது செல்வர்களுக்கு மட்டுமே உரியதாகவும் ஏழை எளியோருக்கு எட்டாக்கனியாகவும் இருந்தது. ஏழை எளியோர் தங்களின் வாழ்க்கையைக் கல்வியால் மேம்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பு அரிதாகவே இருந்தது. இன்று எல்லாரும் கல்வியைத் தடையின்றிப் பெறுகின்றனர். **கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இன்று கற்றல் இனிதாகவும் ஆர்வமூட்டக்கூடியதாகவும் இருக்கின்றது.** ஒழுக்கத்தையே அடிப்படையாகக்கொண்டு நடத்தப்பட்ட குருகுலக்கல்வி அன்று இருந்தது. ஆனால், இன்றோ தொழில்நுட்பம் கற்பவற்றை எல்லாம் கணினிமயமாய் மாற்றிவிட்டது. என்றாலும், நல்லவனவற்றைப் போதிப்பது என்னும் அடிப்படை இன்னும் மாறவில்லை. காலம் மாறும்; காலம் மாறக் கருத்துகளும் மாறுகின்றன. **காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்கள் நிச்சயம் தேவைப்படுகின்றன.** நம் கல்விமுறையும் அதற்கு விதிவிலக்கன்று.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

**பனுவல் இரண்டு**

| கருத்துக்களத்தில் இன்று – பரணி | இத்தொகுப்பில் சில... |
|---|---|

## விழுமியக் கல்வி

இன்றைய சூழலில் அறநெறிப் பண்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விழுமியக்கல்வி பள்ளியளவில் ஒருங்கிணைத்துக் கற்பிக்கப்படுகின்றது. இதன் வழியாகக் கல்வி கற்கும் சூழலை ஆரோக்கியமானதாக உருவாக்க இயலும். கணிதம், அறிவியல் என எந்தப் பாடத்தைக் கற்பித்தாலும் எத்தகைய திறன் வளர்ச்சிப் பயிற்சிகளில் ஈடுபட்டாலும் அவற்றுடன் அறநெறிப் பண்புகளையும் வலியுறுத்தவேண்டும். குறிப்பாக, சிறுவயதிலிருந்தே இவற்றை வலியுறுத்துவதன்மூலம் தேவையான நற்பண்புகள் கொண்ட குடிமக்களை உருவாக்கிட இயலும்.

இன்றைய சமுதாயத்திற்கு அவசியம் தேவைப்படுவது அறநெறிப் பண்புகளே. அவற்றை மதித்துப் போற்றாத சமுதாயமே இல்லை எனலாம். தேர்வுகளிலும் சரி, பள்ளிகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளிலும் சரி, மாணவர்கள் யாவரும் வெற்றி பெறும் முனைப்புடனேயே ஈடுபடுகின்றனர். ஆனால், அவற்றின்வழி மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியப் பாடம் ஒன்று உள்ளது. வெற்றி தோல்விகளை ஏற்கும் மனநிலையைப் பெறுவதுதான் அது. மதிப்பெண்களைவிட அறநெறிப் பண்புகளே மாண்புடையன. அதனால்தான் அறநெறிப் பண்புகளை வலியுறுத்தும் பாடத்திட்டம் நமது கல்விமுறையில் இடம்பெற்றுள்ளது.

நல்லொழுக்கத்தை வளர்ப்பதே கல்வி என்று ஆன்றோர் கூறியுள்ளனர். ஆனால், இன்றைய கல்விமுறையோ அந்தச் சிந்தனையிலிருந்து விலகிச் செல்வப்பெருக்கத்தை மையமாகக்கொண்டு இயங்கத் தொடங்கிவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. அறநெறிப் பண்புகளையும் குடும்ப உறவுகளையும் புறந்தள்ளும் சுயநல அறிவுப்பெருக்கம் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டது. கல்வி வணிகமாகிவிட்டது. மருத்துவம், சட்டம் என அனைத்துத் துறைகளிலும் நிபுணர்களின் தேவை சமுதாயத்திற்கு நிச்சயம் தேவை. ஆனால், அவர்கள் அறநெறிப் பண்புமிக்கவர்களாக இருப்பது அவசியமல்லவா? அப்போதுதான் அவர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாக இருப்பார்கள். நாட்டிற்கும் வீட்டிற்கும் நற்பண்புகள் நிறைந்த குடிமக்களை உருவாக்குவதே பெற்றோர்களின் தலையாய கடமையாக இருக்கவேண்டுமே தவிர, அதிகம் சம்பாதிப்பவர்களாக உருவாக்குவதையே மையமாகக் கொண்டிருக்கக்கூடாது. நற்பண்புகளை வளர்க்கும் விழுமியக் கல்வியால் மட்டுமே இது சாத்தியமாகும்.

**வினாக்கள்**

**6** கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக்குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (6 மதிப்பெண்கள்)

*கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இன்று கற்றல் இனிதாகவும் ஆர்வமூட்டக்கூடியதாகவும் இருக்கின்றது.*

**i)** எழுவாய்
**ii)** பெயரெச்சம்
**iii)** ஏழாம் வேற்றுமை உருபேற்ற சொல்

**7** கல்வி கற்கும் சூழல் எப்போது ஆரோக்கியமான ஒன்றாக உருவாகும் எனக் கட்டுரையாசிரியர் பரணி குறிப்பிடுகின்றார்? (5 மதிப்பெண்கள்)

**8** இன்றைய கல்விமுறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் குறித்து எழுத்தாளர்கள் இருவரும் கொண்டுள்ள வேறுபட்ட கண்ணோட்டத்தை விளக்குக.
(7 மதிப்பெண்கள்)

**9** 'காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்கள் நிச்சயம் தேவைப்படுகின்றன.' எனக் கூறுவது பொருந்துமா? இரு பனுவல்களை அடிப்படையாகக்கொண்டு உன் கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் 140 சொற்களுக்கு மிகாமல் எழுதுக.
(15 மதிப்பெண்கள்)

முற்றும்

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.